நல்லூர் இணை நூலகம்

சர்வதேச ரீதியில் ஸ்ரீலங்கா அரசுக்கு பெரும் நெருக்கடி

[லண்டன்]

தமிழர் பிரச்னைக்கு நிரை வில தீர்வுகாணப்படாவிட் டால் சர்வதேச ரீதியிலான நெருக்கடி அரசுக்கு ஏற்பட லாம்.

இலங்கை அரசியலில் அன் மைக்காலமாக ஏற்பட்டுவரும் மாற்றங்கள் மற்றும் இனப் பிரச்னை விடயத்தில் அரச லகளாலும் நடவடிக்கை களால் அரசுக்கு பெரும் நெருக்கடி நிலை ஏற்பட்டுள் ளது.

வடக்கு கிழக்குப் பகுதி களில் பெரும் போர் நடை பெற்றுக்கொண்டிருக்கிறது இதனால் பெருமளவு மக்கள் கொலைப்பட்டு வருகிறார்கள். இந்தப்பிரச்னையைத் தீர்ப்ப தில் அரசு காலம் கடத்தி வருகிறது. இதனையை பிரச் னைகளினால் அரசுக்கு சர்வ தேச ரீதியில் நெருக்கடி ஏற் படலாம் என்று எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது. [ரி]

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2023 மார்கழி 21 இதழ் 329

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 05 — 01 — 1993

பருவவெளியீட்டுப்பகுதி விலை ரூபா 5-00
யாழ்ப்பாண நூலகம்

படையினர் இழப்பு குறித்து சிங்கள மக்கள் அதிருப்தி

(கொழும்பு)

வடக்கு, கிழக்குப் பகுதி களில் கடந்த வருடம் விடு தலைப்புலிகளுடன் இடம் பெற்ற மோதல்களில் கூடுத லான படையினர் கொல்லப் பட்டதை குறித்து சிங்கள மக் கள் மத்தியில் பெரும் அதி ருப்தி ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

படையினர் தரப்பில் ஏற் பட்ட கூடுதலான உயிர்ழப பிற்கு தற்போதைய அரசே காரணம் என்றும் அவர்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

இது தொடர்பாக எதிர்க் கட்சிகளுடன் இணைந்து சிங் கள மக்கள் அரசாங்கத்தின் கவனத்திற்கு இதனைகொண்டு வரப் படவுள்ளதாக தெரி விக்கப்படுகிறது. (ரி)

இனப்பிரச்னைக்கு தீர்வு காண்பதில் அரசு அக்கறையாக செயற்படவில்லை

அரசியல் நிபுணர்கள் குற்றச்சாட்டு

(லண்டன்)

இனப் பிரச்னையைத் தீர்த்துவைப்பதில் அரசு அக்கறையாக செயற் படவில்லை. இந்தப் பிரச்னையைத் தீர்த்துவைக்காமல் அரசு இழுத்தடித்து, போரைத் தீவிரமாக்குவதிலேயே கவ னம் செலுத்தி வருகிறது என்று அரசியல் நிபுணர்கள் குற் றம் சாட்டியுள்ளனர்.

இனப்பிரச்னைய தீர்க்கும் வுக்குழுவின் நிலை இன்று ஒரு முயற்சியாக அரசினால் கேள்விக்குறியாக இருக்கிறது. நியமனம்செய்யப்பட்ட தெரி விடுதலைப்புலிகள் பேச்சு வார்த்தைக்கு தயாரான நிலையில் இருக்கின்ற போதும் அரசு அதனைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளாமல் போரைத் தீவிரமாக்குவதிலே கவனம் செலுத்தி வருகிறது.

போர் நிலை நீடிப்பதற்கு அரசுதான் காரணமாக இருக்கிறது. எனவே போர் நிலைமையை தவிர்த்து பேச்சுக் களுக்கான வரய்ப்பை ஏற் படுத்துவதை விடுத்து போரை தொடர்ந்து, ஜனாதிபதி தேர்தல் முடியும் வரை இனப் பிரச்னையை இழுத்தடிப்பதிலே அரசு கவனம் செலுத்திவரு கிறதென்றும் அரசியல் நிபு ணர்கள் மேலும் கருத்துவெளி

வடக்கு-கிழக்கு பகுதியில் போர் தொடர முயற்சி

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் பகுதி களில் சமாதானத்திற்கான சாத்தியங்கள் குறைந்துவிள துடன். போரைத் தொடர் வதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகக் கொழும்பில் அரசியல் வட்டா ரங்கள் தெரிவித்தன.

இப் பகுதிகளில் தொடர்ந்து தரப்பில் நடவடிக்கை மேற் கொளப்பட்டு வருகிறது.

வடகிலா, கிழக்கிலா முத லில் தாக்குதல் நடத்துவது என்ற நிலையில் படையினர் இருப்பதாகவும், எப்பகுதியி லேனும் ஒரு பாரிய தாக்கு தல் நடத்துவதற்குப் படை யினர் தயாராகி வருவதாக

தமிழோசை' வீடியோ படத்தில் நடித்த திருமதி ம. தவமணிதேவிக்கு

அரசு அக்கறையாக செயற்படவில்லை

அரசியல் நிபுணர்கள் குற்றச்சாட்டு

(லண்டன்)

இனப் பிரச்னையைத் தீர்த்துவைப்பதில் அரசு அக்கறையாக செயற்படவில்லை. இந்தப் பிரச்னையைத் தீர்த்துவைக்காமல் அரசு இழுத்தடித்து, போரைத் தீவிரமாக்குவதிலேயே கவனம் செலுத்தி வருகிறது என்று அரசியல் நிபுணர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இனப்பிரச்னையை தீர்க்கும் ஒரு முயற்சியாக அரசினால் நியமனம் செய்யப்பட்ட தெரிவுக்குழுவின் நிலை இன்று கேள்விக்குறியாக இருக்கிறது. விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தைக்கு தயாரான நிலையில் இருக்கின்ற போதும் அரசு அதனைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளாமல் போரைத் தீவிரமாக்குவதிலே கவனம் செலுத்தி வருகிறது. போர் நிலை நீடிப்பதற்கு அரசுதான் காரணமாக இருக்கிறது. எனவே போர் நிலைமையை தவிர்த்து பேச்சுக்களுக்கான வாய்ப்பை ஏற்படுத்துவதை விடுத்து போரை தொடர்ந்து, ஜனாதிபதித் தேர்தல் முடியும் வரை இனப் பிரச்னையை இழுத்தடிப்பதிலே அரசு கவனம் செலுத்திவருகிறதென்றும் அரசியல் நிபுணர்கள் மேலும் கருத்துவெளியிட்டுள்ளனர். (ரி)

தமிழோசை' வீடியோ படத்தில் நடித்த திருமதி ம. தவமணிதேவிக்கு தலைவர் பிரபாகரன் பரிசு வழங்கும்போது எடுக்கப்பட்ட படம்

வடக்கு-கிழக்கு பகுதியில் போர் தொடர முயற்சி

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் சமாதானத்திற்கான சாத்தியங்கள் குறைந்துவருவதுடன், போரைத் தொடர்வதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகக் கொழும்பில் அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

இப் பகுதிகளில் தொடர்ந்து இராணுவத் தாக்குதல்களை மேற்கொள்வதற்கே அரசுத் தரப்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வடக்கில், கிழக்கில் முதலில் தாக்குதலை நடத்துவது என்ற நிலையில் படையினர் இருப்பதாகவும், எப்பகுதியிலேனும் ஒரு பாரிய தாக்குதலை நடத்துவதற்குப் படையினர் தயாராகி வருவதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. (ரி)

ம. நோ. கூ. சங்கங்களுக்கு உணவுப்பொருள் விநியோகம்

(நல்லூர்)

அண்மையில் "குமண" கப்பல் மூலம் எடுத்துவரப்பட்ட உணவுப்பொருட்கள் இன்று முதல் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகிக்கப்படவுள்ளது.

பொருட்களில் சேதாரம் ஏற்பட்டுள்ளதாக முன்னர் குறிப்பிட்ட அளவுகளில் பொருட்கள் சங்கங்களுக்கு வழங்க முடியாதுள்ளதாகவும் யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (158)

யாழ். நகரில் வெகுஜன போராட்டம் நடத்த முயற்சி

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மக்கள் மீது இலங்கை அரசு பொருளாதாரத் தடைக்கு மேலும் அழுத்தங்கள் ஊட்டி தமிழ்மக்கள் பட்டினிச்சாவுக்கு இட்டுச் செல்வதைக் கண்டித்து மாபெரும் வெகுஜனப் போராட்டமொன்று மிக விரைவில் யாழ் நகரில் நடைபெறவுள்ளது.

(4-ம் பக்கம் பார்க்க)

அனுரா - சந்திரிகா ஆதரவாளர்கள் மோதல்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தேசிய அமைப்பாளர் அனுரா பண்டாரநாயக்கா வின் ஆதரவாளர்களுக்கும் அவரது சகோதரியான சந்திரிகா விஜயகுமாரணதுங்காவின் ஆதரவாளர்களுக்கும் இடையில் பெரும் மோதல் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(4ம் பக்கம் பார்க்க)

"போராட்ட வாழ்வை தரிசித்து நிற்கும் அற்புதமான கலைப் படைப்புக்களை நாம் உருவாக்க வேண்டும்" தலைவர் பிரபாகரன்

(யாழ்ப்பாணம்)

"எமது மக்களின் விடுதலை உணர்வையும் போராட்ட வாழ்வையும் ஆழமாக தரிசித்து நிற்கும் அற்புதமான கலைப் படைப்புகளை நாம் உருவாக்கவேண்டும். எமது விடுதலைப் போராட்டம் உலகத்திற்கு ஒருஉன்னத வழிகாட்டியாக அமைந்தது போல, எமது கலாசிருஷ்டிகளும் உலகத்திலோர் பாராட்டும் உயர் தரத்தை எட்டவேண்டும்"

இவ்வாறு தலைவர் பிரபாகரன் நேற்றுமுன்தினம் "தமிழோசை' வீடியோ படத்தை உருவாக்கிய முல்லை மாவட்டக் கலைஞர்கள் மத்தியில் பேசும் பொழுது குறிப்பிட்டார்.

நவீன தொழில்நுட்ப வசதிகள் ஏதுமற்ற நிலையிலும், அவலமான போராட்டச் சூழ் நிலையிலும் மக்களின் போராட்ட வாழ்வை அழகாகச் சித்திரிக்கும் தரமான வீடியோ படத்தை உருவாக்கியது குறித்து, இப்படத்தில் இணைந்து பணியாற்றிய அனைத்துக் கலைஞர்களையும் தலைவர் வெகுவாகப் பாராட்டினார்.

"எதிர்பார்த்ததைவிட மிகவும் தரமாகவும், பார்ப்போரின் உள்ளத்தைத் தொட்டு, போராட்ட உணர்வைத் தூண்டிவிடும் வகையிலும் இந்தக் கலைப் படைப்பு அமைந்திருப்பது குறித்து நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

(4-ம்பக்கம் பார்க்க)

க.பொ.த. பரீட்சைமுடிவுகள் நாளை வெளியிடப்படும்

(நல்லூர்)

கடந்த நவம்பரில் நடைபெற்ற க. பொ. த. சாதாரண தரமுன்னேடிப் பரீட்சை பெறுபேறுகள் நாளை யாழ். பாவட்ட பாடசாலைகளில் வெளியிடப்படும்.

இன்று மாலை கோட்டக் கல்வி அதிகாரிகளிடம் இவை ஒப்படைக்கப் படுமெனவும் அவற்றை நாளை காலை பிரதிகளுக்கான பாடசாலை அதிபர்கள் பெற்றுக் கொள்ளலாம் என கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

வெளியிடப்பட்ட பரீட்சை முடிவுகளின் பிரகாரம் உயர்

(4-ம் பக்கம் பார்க்க)

படையினர்கள் தரப்பில் ஒழுங்கீனம் அதிகரிப்பு

(கொழும்பு)

படையினர் தரப்பில் ஒழுங்கீனங்கள் அதிகரித்து வருவதாக புகார் தெரிவிக்கப்படுகிறது.

படையினர் தரப்பில் ஏற்படும் ஒழுங்கீனம் தொடர்பாக விசாரணைகள் நடத்தியதென

(4 ம்பக்கம் பார்க்க)

வரி விளம்பரம்

சித்திரம்

ஆண்டு 11. 1993 க. பொ. த. (சா த.) பரீட்சைப் பாடதி திட்டத்திற்கேற்பவே கபாலீசுவர — 'யசோ. மேலத்தேய. கீழைத்தேய கலைகளின் வளர்சியும், வரலாறும், அடங்கியது. இதி துடன் அலங்காரங்களும் விளக்கப்படங்களும் தொகுதி விற்பனையாகின்றது. கேட்டு வாங்குங்கள். (எ-7115)

சிவாஸ் ஸ்ருடியோ
(டமாற்றம்

பண்டதிதீப்பில் இயங்கி வந்த சிவாஸ் ஸ்ருடியோ தற் பொழுது சித்தங்கேணியில் இயங்கிக் கொண்டு இருக்கிறது. சிறந்த முறையில் விடியோ, கலர் கறுப்பு வெள்ளைப் புகைப்படங்கள் மற்றும் தேசிய அடையாள அட்டைப் படங்களி நிறந்த முறையில் குறைந்த கட்டணத்தில் குறுகிய காலத்தில் பெற்றுக் கொள்ளலாம். "சிவா ஸ் ஸ்ருடியோ. சித்தங்கேணி. வட்டுக்கோட்டை. (சி-7106)

வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள் வலிப்பு நோய், பீநிசம், தலை யிடி, தர்க்காலவியல், சரும நோய்கள், காதவிடாய் குத்து. இரத்தப்போக்கு வெள்ளைக்கிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரிய குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களின் பிரமலமான வர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியர் சி. இராசரத்தினம் 121, 2ம் குறுக்குத் தெரு. யாழ்ப்பாணம். (சி-7119)

கூட்டம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் வேவளம் கிராம அபிவிருத்திச் சங்க கூட்டம் நாளை புதன் கிழமை பி. ப. 3 மணிக்கு யாழ். நாவலர் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

இராசி பலன்

05-01-1993

(தமிழுகு மார்கழி 21)

செவ்வாய்க்கிழமை

துவாதசி மு. இ. 10-13 வரை கார்த்திகை நி. ப. 12-07 வரை இராகுகாலம் மாலை 3-31 முதல் 5-01 வரை; சுப நேரம் காலை 10-01 முதல்

ஓ
சிவமயம்
"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"
காரைநகர் மணிவாசகர் சபையினரால்
நடாத்தப்படும்

★ மணிவாசகர் விழா ★

(38-வது ஆண்டு)

காலம்: 07-01-1993 வியாழக்கிழமை
பிறிபகல் 1-00 மணி

இடம்: வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் தேவஸ்தான மண்டபம்

திருவாசகத் திருமுறை ஓதல்:
திரு. மு. சுந்தரலிங்கம் அவர்கள்

தலைவர்: பண்டிதர் திரு. மு. சு. வேலாயுதபிள்ளை
(உப தலைவர், மணிவாசகர் சபை)

ஆசியுரை:
நல்லை திருஞானசம்பந்தர் ஆதின குருமகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள்

★ "திருவாசக இன்னிசை" ★
பண்ணிசைப்புலவர் திரு. வேலுப்பிள்ளை சிவஞானம் அவர்கள்

சொற்பொழிவு:
(1) "நில்லை கண்டேனே"
திரு. க. பாலசுப்பிரமணியம் அவர்கள்
(பொறுப்பதிகாரி, காரைநகர் தெற்கு பிரதேச சபை)
(2) "திருவாசகத் தேன்"
(பண்டிதர் திரு. ப இராசகுரு அவர்கள்)

காரைநகர் மணிவாசகர் சபை நடாத்திய பரீட்சையில் முதன்மைச் சித்தியடைந்தவர்களுக்கு பரிசில் வழங்கல்

பரிசில் வழங்குபவர்:
திரு. ப. விக்னேஸ்வரன் B. Sc. Dip in Edu., S L. E. A.S.
(கன்னாம் கொத்தணி அதிபர்)

நன்றியுரை:
திரு க. திலீலயம்பலம் (பரீட்சைச் செயலாளர்)

செ. தேவதாசன் B. A. Dip. in Edu
தலைவர்

து. நாகேந்திரன், ஆ. செந்தில்நாதன்
இணைச்செயலாளர்கள்

காரைநகர் மணிவாசகர் சபை

விளம்பர அனுபளிப்பு:
சோபிதா பாடசாலை அலுவலக உபகரணங்கள் விற்பனையாளர்
363, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(ஏ 2758)

ஒலிப்பதிவுநாடா வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகள் மகளிர் படையணி உருவாக்கிய "விழித்தெழுவோம்" என்னுப் பாடல் ஒலிப்பதிவு நாடாவின் வெளியீட்டு விழா நாளை 06ம் தேதி புதன்கிழமை மாலை 4-00 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

விவாகசான்றிதழ் வழங்கும் வைபவம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி ராதை சனசமூக நிலையத்திலும், அச்செழு அக்காச்சி சனசமூக நிலையத்திலும், சிறுப்பிட்டி தெற்கு அண்ணை சனசமூக நிலையத்திலும் வலிகிழக்கு சனசமூக நிலைய சமாசத்தின் ஆதரவில் நடந்தேறிய 55 தம்பதிகளினது திருமணப்பதிவு புத்தூரைச் சேர்ந்த வலிகிழக்கு பதிவாளரான திரு எஸ். திலீலன் அம்பலவாணரால் நிறைவேற்றி வைக்கப்பட்டது.

நீர்வேலி றேடன் கற்தோலிக்கப் பாடசாலையில் அண்மையில் வலிகிழக்கு சனசமூக நிலையத் தலைவர் திரு. வி. இராசரத்தினம் தலைமையில் நடைபெற்ற வைபவத்தில் சான்றிதழ்கள் லயன்ஸ்கழகத் தலைவர் திரு. த. சண்முகநாதனால் வழங்கப்பட்டது. இவ்வைபவத்திற்கு சிறப்பு விருந்தினராக உள்ளூராட்சி ஆணையாளர் சு. டிலகலாலா கலந்து கொண்டார். (க)

கட்டாக்காலி நாய்களை அழிக்க நடவடிக்கை

(புலோலி)

வடமராட்சிப் பகுதியில் கட்டாக்காலி நாய்களை அழிக்கும் நடவடிக்கைகள் சுகாதாரப் பரிசோதகர்களின் உதவியுடன் இப்பகுதியிலுள்ள நகரசபைகள் என்பன மேற் கொண்டுள்ளன. (61

திருட்டு

(அச்சுவேலி)

அச்சுவேலிகிழக்கு பகுதியில் உள்ள தோட்டங்களில் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள பயிர்களில் விளை பொருட்கள் திருடிச் செல்லப்படுவதுடன் திருடர்கள் பயிர்களை சேதப்படுத்திவிட்டுச் செல்வதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

அச்சுவேலி கிழக்குப் பகுதியில் உள்ள நாச்சியார் கோயில் இத்தாவில், பன்னுரை கொள்ளன்தூவு, பரமன் தாழ்வு ஆகிய பகுதியில் பயிர்செய்கையில் ஈடுபட்டுள்ள 50 விவசாயிகள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பாவற்காய், புடலங்காய், பூசணிக்காய், மிளகாய், பயிற்றங்காய் என்பன திருடிச்செல்லப்படுவதுடன் வெங்காயம் உட்பட பயிர்கள் சேதப்படுத்தப்படுவதாகவும் கூறப்பட்டுள்ளது. (74)

பிரிவுபசார விழா

(நெல்லியடி)

பருத்தித்துறை பிரதேச செயலக திட்டமிடல் உதவி யோகத்தர் திரு சிற்றம்பலம் திற்கும், அலுவலக இலிகிதர் திருமதி சுசிலா முருகேசபிள்ளைக்கும், பிரிவுபசார விழா மேற்படி பணிமனை மண்டபத்தில் பிரதேச செயலர் திரு. கே. முருகேசபிள்ளை தலைமையில் நடைபெற்றது. (160)

சித்த
மருத்துவ மலர் வெளியீடு

(திருநெல்வேலி)

யாழ் பல்கலைக்கழக 1990-91ஆம் கலைப்பீடத்தின் சித்த மருத்துவ மாணவர் மன்றத்தின் "சித்தமருத்துவ" ஐந்தாவது மலர் வெளியீடு நாளை 6-ம் திகதி புதன்கிழமை காலை 10 மணியளவில் சித்தமருத்துவ அரங்கில் நடைபெறவுள்ளது.

வைத்தியகலாநிதி எஸ். பவானி தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பாழ். பல்கலைக்கழக சுலைப்பீடாதிபதி பொ. பாலசுந்தரம்பிள்ளை மலரின வெளியிட்டு வைத்து சிறப்புரையாற்றுவார். -157

இளங்கலைஞர் மன்ற கலாமண்டபத்
திறப்புவிழாவும் "ராகபாவம்"
நிதியுதவி நிகழ்ச்சியும்

இடம்: மன்ற கலாமண்டபம்
சட்டநாதர் வீதி, நல்லூர்

காலம்: 6-2-93 முதல் 8-2-93 வரை
கலாமண்டபத் திறப்புவிழா
6-2-93 சனிக்கிழமை

நிதியுதவி நிகழ்ச்சி
7-2-93 ஞாயிறு (முதலாம் நாள்)
மாலை 5 மணி முதல் இரவு 10 மணி வரை

5-00—6-30 நாதஸ்வர இசை:
நாதஸ்வரம்: N. K. பத்மநாதன், S. S. சிதம்பரநாதன், R. கேதீஸ்வரன்.
தவில்: K. R. புண்ணியமூர்த்தி, T. உதயசங்கர், P. முருகதாஸ்

6-30—8-00 பரதநாட்டியம்:
நாட்டியக் கலைமணி செல்வன் M. அருள்மோகன்
நட்டுவாங்கம் — திருமதி சாந்தினி சிவநேசன் (மொக்குவில் கலாபவனம்)
பாட்டு: — S. பத்மலிங்கம்
மிருதங்கம்: — S. மகேந்திரன்
வயலின்: — R. ராதாகிருஷ்ணன்

8-00 — 9-30 எழுச்சிப் பாடல்கள்:

மகளிருக்கான
டிப்ளோமா
மனைபொருளியலும்
கைத்திறனும்
பயிற்சி நெறி

★ கேக் ஐசிங்
★ சமையற் கலை

(சிறுண்டிகள், குளிர்பானங்கள்: ஐஸ்கிறீம் வகைகள். புடிங் வகைகள், உள்ளூர் மூலப் பொருள்களின் உணவுக்க தயாரித்தல்)

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தண்காலவியல், சருமநோய்கள், மாதவிடாய்க் குறை, இரத்தப்போக்கு, வெள்ளைகழிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக் குறைவு, மூலவியாதிகள், முதிர்நோய்களில் பிரதானமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியர் சி. இராசரத்தினம் 121, 2ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (சி-7119)

கூட்டம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கோவளம் கிராம அபிவிருத்திச் சங்க கூட்டம் நாளை புதன்கிழமை பி. ப. 3 மணிக்கு யாழ். நாவலர் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

இராசி பலன்

05-01-1993

(தமிழுக்கு மார்கழி 21)

செவ்வாய்க்கிழமை

துவாதசி மு. இ. 10-13 வரை கார்த்திகை நா. ப. 12-07 வரை இராகுகாலம் மாலை 3-31 முதல் 5-01 வரை; சுப நேரம் காலை 10-01 முதல் 12-31 வரை சித்தாமிர்த யோகம்.

மேடம்: நண்பரி விரோதம், உஷ்ணரோகம், கடின உழைப்பு.

இடபம்: கடித அனுகூலம், பெரியோர் ஆதரவு, பந்து வருகை.

மிதுனம்: எதிரிப்புக்களால் கவலை, வீண்பிரயம், மரியாதைக்குறைவு.

கடகம் பயணம் கைகூடும். சகோதர நன்மை.

சிங்கம்: அன்னியர் உதவி, பணவரவு, தொழில் சிறப்பு.

கன்னி: விவகாரங்களில் கவலை, மன அமைதி குன்றல், காரியத் தடை.

துலாம்: கோபத்திற்கு ஆளாதல். மனக்கலக்கம், கருத்து மோதல்.

விருச்சிகம்: கடித அனுகூலம், தொழில் லாபம், குடும்ப சந்தோசம்.

தனுசு: புதிய முயற்சி, பொருத்துறை ஈடுபாடு, பாராட்டு.

மகரம்: தொழில் மந்தம், குடும்பபிரிவு, புதிரர் கவலை.

கும்பம்: மனவிரிவு, மனஸ்தாபம், சோம்பல், அடிபணிதல்.

மீனம்: காரிய அனுகூலம், தொழில் சந்திப்பு, விருந்துண்ணல்.

– ஜோஸ்யர்

(சுன்னாகம் மொத்தணி அதிபர்)

நன்றியுரை:

திரு க. திலீலயம்பலம் (பரீட்சைச் செயலாளர்)

செ. தேவதாசன் B. A. Dip. in Edu தலைவர்

து. நாகேந்திரன், ஆ. செந்தில்நாதன் இணைச்செயலாளர்கள்

காரைநகர் மணிவாசகர் சபை

விளம்பர அறிவிப்பு:

சோபிதா பாடசாலை அலுவலக உபகரணங்கள் விநியோகஸ்தர்

363, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(ஏ 2758)

விளக்கப் பாடசாலையில் அண்மையில் வலிகிழக்கு சனசமூக நிலையத் தலைவர் திரு. வி. இராசரத்தினம் தலைமையில் நடைபெற்ற வைபவத்தில் சான்றிதழ்கள் லயன்ஸ் கழகத் தலைவர் திரு. த. சண்முகநாதனால் வழங்கப்பட்டது. இவ்வைபவத்திற்கு சிறப்பு விருந்தினராக உள்ளூராட்சி ஆணையாளர் சு. டிவகலாலா கலந்து கொண்டார். (க)

மகளிருக்கான

டிப்ளோமா

மனமொருளியலும்

கைத்திறனும்

KALALAYAAH கலாலயா

பயிற்சி நெறி

★ கேக் ஐசிங்

★ சமையற் கலை

(சிறுறுண்டிகள், குளிர்பானங்கள்: ஐஸ்கிறீம் வகைகள், புடிங் வகைகள், உள்ளூர் மூலப் பொருள்களில் உணவுகள் தயாரித்தல்)

★ கூந்தல் அலங்காரம்

(கொண்டைகள் போடுதல், விக் தயாரித்தல், மணப்பெண் அலங்காரம் செய்தல்)

★ கைப்பணிகள்:

(மக்றம், கம்பளி நூல் வேலை, பஞ்சில் பொம்மை செய்தல் வைக்கோல் வேலை, வாழைநார் வேலை, கழிவு துணிகளில் அலங்காரம் செய்தல்)

★ பூவேலை:

(கடதாசியிலும், துணிகளிலும் மலர்கள், மலர்ச்செண்டுகள் செய்தல்)

★ தையற் கலை:

(குழந்தைகள், சிறுவர்கள், மகளிருக்கான ஆடைகள் தயாரித்தல், பூவேலைப்பாடுகள் செய்தல்)

பயிற்சிக் காலம் 6 மாதங்கள்

பயிற்சி முடிவில் டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்படும்.

சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம்: 10-01-1993

காலை 9.00 மணி

கிழமை நாள் பிரிவுகள் ஆரம்பம்: 11-01-1993

காலை 9.00 மணி

★ கலாலயா ★

விக்டோறியா வீதி,

(ஆஸ்பத்திரியின் பின்புறம்)

யாழ்ப்பாணம்.

(ஏ 2759)

இளங்கலைஞர் மன்ற கலாமண்டபத்

திறப்புவிழாவும்

"ராகபாவம்"

நிதியுதவி நிகழ்ச்சியும்

இடம்: மன்ற கலாமண்டபம்

சட்டநாதர் வீதி, நல்லூர்

காலம்: 6-2-93 முதல் 8-2-93 வரை

கலாமண்டபத் திறப்புவிழா

6-2-93 சனிக்கிழமை

நிதியுதவி நிகழ்ச்சி

7-2-93 ஞாயிறு (முதலாம் நாள்)

மாலை 5 மணி முதல் இரவு 10 மணி வரை

5-00—6-30 நாதஸ்வர இசை:

நாதஸ்வரம்: N. K. பத்மநாதன், S. S. சிதம்பரநாதன், R. கேதீஸ்வரன்,

தவில்: K. R. புண்ணியமூர்த்தி, T. உதயசங்கர், P. முருகதாஸ்

6-30—8-00 பரதநாட்டியம்:

நாட்டியக் கலைமணி செல்வன் M. அருள்மோகன்

நட்டுவாங்கம் — திருமதி சாந்தினி இவநேசன் (மொக்குவில் கலாபவனம்)

பாட்டு: — S. பத்மலிங்கம்

மிருதங்கம்: — S. மகேந்திரன்

வயலின்: — R. ராதாகிருஷ்ணன்

8-00 — 9-30 எழுச்சிப் பாடல்கள்:

மெல்லிசைவாணர் G. சாந்தன் குழுவினர்

8-2-93 திங்கள் (இரண்டாம் நாள்)

நாதஸ்வர இசை:

நாதஸ்வரம்: V. K. ஞானமூர்த்தி, V. K. பஞ்சமூர்த்தி

தவில்: K. நித்தியானந்தன், N. கணேசன், R. S. சுதாகரன்

இசைக்கச்சேரி:

பொன் சுந்தரலிங்கம் — பாட்டு

R. ராதாகிருஷ்ணன் — வயலின்

S. மகேந்திரன் — மிருதங்கம்

S. துரைராஜ் — கஞ்சிரா

சதா பேரின்பராஜன் — கடம்

இன்னிசை வார்ப்புகள்:

இசையமைப்பாளர் கண்ணன் வழங்கும்

★ மெல்லிசை நிகழ்ச்சி ★

பாடகர்கள்: G. சாந்தன், பொன்சி, வரீண ராமேஸ்வரன், பார்வதி சிவபாதம், மிதிலா விஜேகானந்தன், ராதிகா சுப்பிரமணியம்

9-2-93 — 23-2-93 வரை பதினைந்து தினங்கள் "இசைவிழா" நடைபெறும்.

விசேட ஒலி. ஒளி:

ஒலி: நித்தி சவுண்ட்ஸ், யாழ்ப்பாணம்.

ஒளி: மூன் லைற், கோப்பாய்.

பொன் சுந்தரலிங்கம்

தலைவர்

வாழ்த்துகிறோம்

ஹரன் வர்த்தக ஸ்தாபனம்,

772, தட்டாதெரு சந்தி, யாழ்ப்பாணம்.

(ஏ-2739)

சேதப்படுத்தப்படுவதாகக்கூறப் மலசீன வெளியிட்டு வைதின டப்டுள்ளது. (74) கிறப்புரையாற்றுவார். -157

கோபம், கவலை, பரபரப்பால் 'அல்சர்' நோய் ஏற்படலாம்

நம்மில் பலருக்கு திடீரென்று 'வாய் அல்சர்' (வாய்ப்புண்) ஏற்படுகின்றது. குடலில் புண் ஏற்படுவதற்கு இந்த வாய்ப்புண் ஒரு அறிகுறியென்று கூறப்படுகிறது. இந்த குடற்புண்ணையே 'அழற்சி' [அல்சர்] என்று குறிப்பிடுகிறோம்.

இந்த நோய், உணவு சமிபாடு அடைவதற்கு சுரக்கப்படும் ஹைட்ரோகுளோரிக் அமிலம் சிலவேளைகளில் கூடுதலாக சுரப்பதால் ஏற்படுகின்றது. அதுகப்பப்படியான அமிலம் சுரப்பதால் மெல்லிய வயிற்றுத் திசுக்களைப் பாதிக்கின்றது. இதனால் தான் வயிற்றில் புண்ணும் அழற்சியும் ஏற்படுகின்றது.

மேற்கூறிய அமிலம் புண்களுக்கு மேலே பாய்ந்து செல்லுமபோது சொல்லமுடிய தவலியும், எரிவும் ஏற்படுகின்றன எரிச்சல், வயிறு காந்தல் ஏற்படுவதால் உணவும் வயிற்றில் தங்கி இருக்காத நிலையும் ஏற்படுகின்றது

வயிற்றுப்புண் பெரிதாக இருந்தால் ஜீரணப்பாதையே அடைத்துவிடும். வெய்யில் காலத்திலும் கடுமையான ஜலதோசத்தினாலும் இந்த நோய் ஏற்படுகிறது. காலை உணவு உண்பவர்களுக்கு இந்த நோய் அடிக்கடி வரலாம்,

'ஓ' குறாப் இரத்தமுள்ளவர்கள் இந்த வயிற்றுப்புண்ணால் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். அமெரிக்காவில் 10 பேரில் 3 பேருக்கு இந்நோய் உள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்நோய் தோன்றுவதற்கு பல காரணங்கள் உண்டு ஆகாரத்தை மென்று உண்ணமல் விழுங்கும் சிலருக்கு அஜீரணக் குறைவாலும், உரியநேரத்தில் சாப்பிடாமல் விடுவது, மிதமிஞ்சி சாப்பிடுவது, மிதமிஞ்சி கோப்பி தேனீர் பருகுதல், மிகச்சூடான பானம் அருந்துவது, கடுமையான வயிற்றுப் போக்கு, விட்டமின் பற்றாக் குறைவு, மனக்கவலை, கோபம், பரபரப்பு ஆகியவை இந்நோய் ஏற்படுவதற்குரிய சில காரணிகளாகும்.

இந்நோயை குறுவைச் சிகிச்சை மூலமும், மருந்துச் சிகிச்சை மூலமும், மனோயல முறையிலும் மாற்றலாம்.

அறுவைச் சிகிச்சை செய்யும் போது வயிற்றின் தசையின் பருமன் குறைப்பதால் அதிக அமிலம் சுரக்கப்படுகிறது அதனால் சிறிய அமிலம் கட்டுப்படுத்தப்படுகிறது.

மருந்து முறைக்கு உணவில் உப்பை குறைக்கவேண்டும். சாப்பாட்டில், பால், தயிர், காய்கறி, முட்டை சேர்க்க வேண்டும். கோப்பி, தேனீர், அருந்தக்கூடாது. விட்டமின் 'சி' நிரம்பிய பழங்களும், கீரைவகைகளும் உணவிற்சேர்க்கவேண்டும்.

கோபம், மனக்கவலை, பரபரப்பு ஆகியவற்றை அறவே ஒழிக்கவேண்டும்.

இந்தநோயின் அறிகுறிகள், செரிமாட்டு குறைவு, நெஞ்சு எரிச்சல் ஆகியனவாகும்.

இந்தநோயில் இரண்டுவகையுண்டு, 'பெப்டிக் அல்சர்' என்ற வயிற்றுப் புண்ணும், 'டியோடெனல் அல்சர்' என்ற குடற்புண்ணுமாகும். (சு)

யாழ். மாவட்டத்தில் 53 தொழிற்சாலைகள் சேதம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் இடம் பெற்றுவரும் இராணுவ நடவடிக்கையினால் 53 தொழிற் சாலைகள் சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. விமானத் தாக்குதல்களினாலேயே இத் தொழிற்சாலைகள் சேதமடைந்துள்ளன. இதேவேளை இம்மாவட்டத்திலுள்ள ஆறு பாரிய தொழிற்சாலைகளும் சூன்டுவீச்சு மற்றும் விமானத் தாக்குதல்களினால் சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. - க

உ. அ. அ. பிரிவு ரீதியாக திட்டமிடல் சேவை பணிப்பாளர்கள் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் நிறுவப்படுவதற்கென உத்தேசிக்கப்பட்டுள்ள முழுநிறைவான பிரதேச செயலகங்களில் திட்டமிடல் அபிவிருத்தி வேலைகளை மேம்படுத்தும் நோக்கில் முதற்கட்ட நடவடிக்கையாக உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு திட்டமிடல் சேவை உதவிப்பணிப்பாளர்கள் 14 பேர் பொதுச் சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பொதுநிர்வாக உள்நாட்டு மாகாணசபைகள் அமைச்சின் சுற்றறிருப்படி திட்டமிடல் உதவிப் பணிப்பாளர்களின் மேற்பார்வையில் பிரதேச திட்டமிடல் அலகு பிரதேச திட்டங்களைத் தயாரித்தல், அமுல் நடத்தல், முன்னேற்றக் கட்டுப்பாட்டு அறிக்கை யிடல், பன்முகவரவு செலவுத் திட்டங்களை தயாரித்துசெயற் படுத்தல், மீளாய்வு செய்தல், புள்ளிவிபரந் தயாரிப்பு நிரைப்படுத்தல் போன்றபலம், மகளிர் அபிவிருத்தி, குழந்தைகள் நலம், போஷாக்கு, பயிற்சி வசதி, சுயதொழில் அபிவிருத்தி முதலிய விடயங்களில் முழுக்கவனம் செலுத்துமாறு பணிக்கப்பட்டுள்ளது. - அ

திருவாசகம் முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

கந்தரோடை-ஸ்ரீசிவகுருநாத குருபீடம் வேதாந்த மடத்தில் தினமும் மாலையில் திருவாசகம் முற்றோதலும், சொற்பொழிவுகளும் நடைபெறுகிறது.

குருபீடாதிபதி, ஸ்ரீமத் சோமாஸ்கந்தவேள் சுவாமிகளின் அருளாசியுடன் இடம் பெற்றுவரும் இந்நிகழ்ச்சிகள் இம்மாதம் 9ம் தேதி சனிக்கிழமை வரை இடம்பெறவுள்ளன. - அ

தமிழக இடைத்தேர்தலில் அ.தி.மு.க. - காங்கிரஸ் கூட்டு

(சென்னை)

பழனி மக்களவைக்கு பெப்ரவரி 15ம் திகதி நடைபெறவுள்ள இடைத்தேர்தலில் இந்திரா காங்கிரஸ் கட்சி அ. தி. மு. க. ஆதரவுடன் போட்டியிடும் என தமிழக காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி கே. ராமமூர்த்தி தெரிவித்துள்ளார்.

கோயம்பத்தூரில் நேற்று முன்தினம் பத்திரிகையாளர் மத்தியில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: ராணிப்பேட்டை சட்டப் பேரவைக்கான இடைத்தேர்தலில் அ. தி. மு. முழக்கத்தை காங்கிரஸ் (ஐ) ஆதரிக்கும் என்றும் இரு கட்சிகளுக்கும் இடையிலான உறவுகள் தொடர்ந்து சுமுகநிலையிலேயே இருக்கும் என்று தெரிவித்தார்.

இதற்கிடையில் ஆளும் இந்திராகாங்கிரஸ் கட்சிக்கும் அ. தி. மு. க. விற்கும் இடையிலான உறவுகள் சமீபகாலமாக முறுகலடைந்து அடைந்திருக்கும் இவ்வேளையில் வாழப்பாடியின் மேற்படி அறிவித்தல் சற்று தெம்பூட்டுவதாக உள்ளதாக அரசியல் வட்டாரங்கள் கருதுவதாக வெளியிட்டுள்ளனர். (க)

நெற்பயிர் சேதம்

(பண்டத்தரிப்பு)

யாழ். மாவட்டத்தில் நெற் பயிர்களில் அறக்கொட்டியான் புழுத்தாக்கம் அதிகரித்துள்ளது. நெற் குருத்துகளை இப் புழுக்கள் தாக்குவதால் நெற் பயிர்கள் வடி மஞ்சள் நிற இலைகளாக மாறி அழிந்து விடுவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (72)

மீன் விலை அதிகரிப்பு

(தாளையடி)

பலமான காற்று வீசுவதினால் கடற்றொழிலுக்குச் செல்லும் கடற்றொழிலாளர்களின் தொகை வெகுவாகக் குறைந்துள்ளது

இதனால் மீன்விலை அதிகரித்துள்ளது. கடற்கரையில் வைத்தே ஒருங்லோ மீன் நூறு நூற்றி இருபது ரூபா வரையில் விற்பனை செய்யப் படுகிறது. (163)

தொழில்சார் துறைகள் வளர தொழிலதிபர்கள் உதவவேண்டும்

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழகங்கள் 'தங்க கோபுரங்கள்' என்றநிலை இன்று மாறி, சகல சமூகங்களின் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கு அறிவுசார் நிலையில் பணி புரிந்துவருகின்றன. இன்றைய நிலையில் பலகலைக் கழகங்கள் எக்காலோர்க்கும் கல்வி என்ற கோட்பாட்டையே செயற்படுத்திவருகின்றன. அத்தகைய நிலைப்பாட்டின் அடிப்படையிலே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் புற நிலைப்படிப்புகள் அலகு என்னும் துறையை ஆரம்பித்து, பாரம்பரியமிக்க துறைகளுக்கு பல்கலைக்கழகத்திற்கு வெளியேயும் பணிபுரிய வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில் "சைவசித்தாந்தம்" தொடர்பான பொது விரிவுரைகளை ஆரம்பித்து உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார்.

இவ்வைபவத்தில் கலைத் துறை பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை உரையாற்றுகையில்: எம்மைப் பொறுத்தவரையில் இன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கும் புதிய அலகின்மூலம் எந்தனோ துறைகளில் அத்துறை சார்ந்தவர்களுக்கு உயர் மட்ட பயிற்சியை வழங்க முடியும். அதற்கான நிதியை அரசாங்கத்திடமிருந்து எதிர்பார்க்காமல் பொருள்வளம் படைத்தவர்களும், தொழிலதிபர்களும் வழங்கினால் அதனை சிறப்பாகச் செய்யமுடியும். இன்றைக்கு இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மட்டும்தான் சகல மக்களுக்கும் நன்மை கிடைக்கக்கூடிய புற நிலைப படிப்பு அலகுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றார்.

இவ்வைபவத்தில் சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி இப்பிரிவின் இணைப்பாளர் இரா. சிவச்சந்திரன், நகில ஆதின குருமகாசன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தம்பிரான் ஆகியோர் உரையாற்றினர். அன்றைய அமரி விக்கிரமநிதிநா. ஞானகுமரன் "சைவமும் சித்தாந்தமும்" என்றபொருள்பற்றி ஆய்வுக் கட்டுரையை சமர்ப்பித்தார். (எஸ்-சி)

ஏற்புத் தடுப்பு ஊசிக்கு பெரும் தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரில் ஏற்புத்தடுப்பு ஊசி மருந்துக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. யாழ். வைத்தியசாலை உட்பட யாழ். குடாநாட்டிலுள்ள அனைத்து அரசினர் வைத்தியசாலைகளிலும் கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக மேற்படி ஊசி மருந்து இல்லையென்றே நோயாளர்களுக்கு கூறப்பட்டுவருகின்றது.

நாய்கடி, மற்றும் வெட்டுக் காயங்களுக்கு உடனடியாக ஏற்றப்படும் இந்த ஏற்புத் தடுப்புஊசி மருந்து தனியார் வைத்தியசாலைகளிலும், தனியார் மருந்துக் கடைகளிலும் மிகக் கூடிய விலைகளுக்கு விற்கப்பட்டு வருகின்றது.

தனியார் வைத்தியசாலைகளில், வெட்டுக்காயங்களுக்குள்ளாகும் நோயாளர்களுக்கு மேற்படி ஊசி மருந்து ஏற்ற 70 ரூபாவுக்கு மேல் அறவிடுவதாக பல நோயாளர்களும் வருத்தத்துடன் தெரிவித்தார்கள். (வி)

வீதிகள் திருத்தம்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை கிழக்கு மணிபபரி கலைமகள் சன சமூக நிலையம், இந்து இளைஞர் மன்றம் ஆகியனவற்றின் ஆதரவில் மணிப்புரி 10ம் 11ம் 12ம், 13ம் ஒழுங்கு வீதிகள் சிரமதானப்பணி மூலம் செப்பனிடப்பட்டுள்ளது. (154)

ஆடைகள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

தென்னிந்தியத்திருச்சபையினால் மானிப்பாய் நவாலி பகுதிகளில் அமைக்கப்பட்ட குடிசைகளில் வாழும் 200 இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு திருச்சபையின் பேராயர் அம்பலவாணர் புனிதாண்டு தினத்தன்று புத்தாடைகளை வழங்கினார்.

சாரம், சாறி, பெட்சீற் சட்டைத்துணி அடங்கிய 200 பொதிகள் விநியோகிக்கப்பட்டன.

சொந்த வீடுகளுக்கு திரும்பியவர்கள் மீண்டும் அகதி முகாமில் தஞ்சம்

(மன்னார்)

சொந்த இடங்களுக்கு திரும்பிய வங்காலை வாசிகள் மீண்டும் அகதி முகாமில் தஞ்சமடைந்துள்ளனர்

மன்னார் மாவட்டத்திலுள்ள வங்காலை கிராமவாசிகள் யுத்த நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து மடு அகதிமுகாமுக்கு சென்றுவிட்டதாக தெரியவருகிறது. (59)

'செங்கமொழி வேந்தன்' கட்டமைத்து வாராட்டு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் ஐயனார் ஆலயத்தில் விநாயகர் பெருங்கதை காலத்தில் 16 தினங்களில் வேறு தலைப்புகளில் சிறப்புச் சொற்பொழிவாற்றிய காரைநகர் கம்பன்கழக அமைப்பாளரும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆசிரியருமாகிய திரு. த. சிவகுமாரனுக்கு கௌரவிக்கும் முகமாக மேற்படி ஆலயத்தின் வழிபடுவோர் சபை அவருக்கு 'செங்கமொழி வேந்தன்' என்னும் கௌரவப் பட்டத்தை வழங்கி கௌரவித்தனர்.

வழிபடுவோர் சபைசார்பில் யாழ்ப்பாண பிரதேச சபைச் செயலர் திரு ஆ. மகாலிங்கம் பொன்னாடை போர்த்தி ஞர். யாழ். செயலக உதவி ஆணையாளர் திரு. து. வைத்திலிங்கம்பட்டமளித்துப்பாராட்டினார். திருவாளர்கள் கணேசபிள்ளை, அருணாசலம், ரட்ணசிங்கம் ஆகியோர் பாராட்டுரை வழங்கினர்.

சொற்பொழிவு நடைபெற்ற காலங்களில் பெருந் தொகையில் பக்தர்கள் கலந்து சிறப்பித்தனர்.

இன்று

(யாழ்ப்பாணம்)

இன்று மாலை 4 மணிக்கு கொழும்பு புனித மிக்கேல் ஆலயத்தில் ஆக்மஜோதி சகோதரர் சி. அ. பிரான்சிஸ் அடிகளுக்கு 12வது நினைவஞ்சலி பூசை ஒப்புக்கொடுக்கப்படும் கலைஞர் மைக்கல் துரையப்பா அன்னரின் நினைவுக்கு மாலை அணிவித்து செபிப்பார்.

பரிசளிப்பு விழா

(வட்டுக்கோட்டை)

சுழிபுரம் ஐக்கிய சங்கவிதியாசாலை வருடாந்தப் பரிசளிப்புவிழா இம்மாதம் 6-ம் திகதி காலை வித்தியாலய அதிபர் திரு: நா. செல்வரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது. (139)

'குமண' கப்பல் இன்று புறப்படுகிறது

(நல்லூர்)

பருத்தித்துறை துறைமுகத்தில் பொருட்களை இறக்கிய 'குமண' கப்பல் இன்று கொழும்பு நோக்கி புறப்படவிருக்கிறது.

இக்கப்பலில் நடந்து முடிந்த க. பொ. த சாதாரண தர பரீட்சை விடைத்தாள்கள், தொலைக்கல்வி ஆங்கில பரீட்சை விடைத்தாள், பலாலி, கோப்பாய் ஆசிரிய பயிற்சிக்கலாசாலை ஆசிரிய மாணவர்களின் இறுதியாண்டு பரீட்சை விடைத்தாள்கள் ஆகியனவும் எடுத்துச்செல்லப்படவிருக்கின்றது.

அதிகாலை யாழ். பிரதம அலுவலகத்திலிருந்து 108 தபாற்பொதிகளும் குமண கப்பலுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது இவ்வாறுஅனுப்பி அனுப்பிவைக்கப்பட்ட பொதிகளில் தீவுப்பகுதிகளுக்குரிய பதிவுத்தபாற்களும் அடங்குகின்றன என அறியவருகின்றது. (158)

அயோத்தியை நோக்கி படையெடுத்த பங்களாதேஸ் முஸ்லிம்களை ராணுவம் தடுத்து நிறுத்தியது

(டாக்கா)

பங்களாதேஷிலிருந்து ஊர்வலமாக இந்தியாவின் அயோத்தியா நகரைநோக்கி புறப்பட்ட 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தீவிரவாத முஸ்லீம்களை பங்களாதேஷ் இராணுவம் தடுத்து நிறுத்தியது.

ஊர்வலத்தினர் மீது இராணுவம் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் மூவர் கொல்லப்பட்டதுடன் நூற்றுக்கணக்கானோர் படுகாயமடைந்துள்ளார்கள்.

இந்தியாவின் எல்லையிலிருந்து 25 கிலோ மீட்டர் தொலைவில் வைத்தே ஊர்வலத்தினரை இராணுவத்தினர் தடுத்து நிறுத்தினர்கள்.

இதற்கு முன்னர் ஊர்வலத்தை தடுப்பதற்கு பங்களாதேஷ் பொலிஸார் இரண்டு தடவைகள் மேற்கொண்ட முயற்சிகளும் தீவிரவாதிகள் உடைத்துக்கொண்டு முன்னேறியது குறிப்பிடத்தக்கது. (பி)

திருவாசகப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

வண்ணை சிவன் கோவிலில் இன்று நடைபெறும் திருவாசகப் பெருவிழா இரண்டாம் நிகழ்ச்சிகள் பேராசிரியர் பா. கோபாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெறவுள்ளது.

'சித்தம் அழகியீர்' என்ற பொருளில் க. கந்தசாமி (காவைகிழார்) யின் சிறப்புச் சொற்பொழிவோடு. இன்னிசை கருத்தரங்கம் ஆகியவை காலை நிகழ்சசிகளாக இடம் பெற உள்ளன.

மாலை நிகழ்வாக கலாநிதி அ.சண்முகதாஸ் தலைமையில் ஆய்வரங்கம் நடைபெறவுள்ளது. (சு)

நள்ளிரவில் துப்பாக்கிச் சூடு இளைஞர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கட்டுவன் பகுதியிலிருந்து படையினர் ஏழாலை மேற்கு குடியிருப்புப் பகுதிகளை நோக்கி நேற்று முன்தினம் நள்ளிரவு கடுமையான துப்பாக்கிப்பிரயோகத்தினை மேற்கொண்டதில் நித்திரையிலிருந்த இளைஞர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஏழாலை மேற்கு பெரிய தம்பிரான் கோவிலடியைச் சேர்ந்த பி. ஈஸ்வரன் (20 வயது) எனபவரே காயப்பட்டவராவர். படையினர் தொடர்ச்சியாக மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தினால் அப்பகுதியில் உள்ள மக்கள் பெரும் பதட்டத்துடன் இரவுப் பொழுதினை கழித்தனர்.

இதற்கு முன் 9 மணியளவில் படையினர் ஏழாலைப்பகுதியை நோக்கி படையினர் ஷெல்தாக்குதல்களையும் மேற்கொண்டிருந்தனர். (56)

கவலைக்கிடமான நிலையில் காயமடைந்தவர்கள்

(யாழ்ப்பாணம்)

இளாலி கடலில் கடற்படையினர் கடந்த சனிக்கிழமை நடத்திய தாக்குதலில் காயமடைந்தவர்களில் பலரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்தவர்கள் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த போதிலும் அங்கு போதிய மருத்துவ வசதிகள் இல்லாமையினால் இவர்களுக்கு சிகிச்சையளிக்க முடியாதிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கிளிநொச்சி கடற்கரையில் கரையொதுங்கிய 15 சடலங்களை காவல் துறையினரால் மீட்கப்பட்டு கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது.

இறந்தவர்களின் உறவினர்கள் இந்தச் சடலங்களை கிளிநொச்சி வைத்தியசாலையில் வைத்து அடையாளம் காண்பதற்குரிய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (பி)

பல்கலைக்கழக விரிவுரைகள் வழமைபோல

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நேற்றைய தினம் விரிவுரைகள் வாவும் வழமை போல் நடைபெற்றன. பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் சம்பள உயர்வு கோரி மேற்கொள்ளவிருக்கும் பகிஷ்கரிப்பு எப்போது என்பது பற்றி இன்னமும் முடிவு செய்யப்படவில்லை.

நேற்று நண்பகல் விரிவுரையாளர்களிடையே கலந்துரையாடல் ஒன்று நடைபெறவிருந்தது. எனினும் இக்கலந்துரையாடல் பின்னரே இடம்பெறவிருக்கிறது. (159)

படையினர்கள் தரப்பில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மூன்று பிரிகேடியர்களை கொண்ட விசாரணைக்குழு ஒன்று இயங்கி வருகிறது.

இத்தகக்குழு படையினரின் ஒழுங்கீனம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு முதல்கட்ட அறிக்கையை அண்மையில் சமர்ப்பித்துள்ளது.

இந்த அறிக்கையின் பிரகாரம் முப்பதிற்கு மேற்பட்ட படையினர் மீது கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். நகரில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்படி போராட்டம் சம்பந்தமான ஆலோசனைக்கூட்டமொன்று இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் சகல அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் கலந்து

மரண அறிவித்தல்

இளாலி கடலில் பலியானோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

இளாலி கடலில் கடந்த சனிக்கிழமை கடற்படையினர் நடத்திய தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் விபரங்கள் வருமாறு:

இளவாலிகம் அன்னபூரணம் (கோட்டைக்காடு ஏழாலை), இராசலிங்கம் செல்லத்துரை (புத்தூர் மேற்கு நவக்கிரி), சின்னையா கனகசபை (பளை), சின்னையா கனகராசா (பளை), நளினி திலகேஸ்வரம்பல நாதன், யசோதா செல்லத்துரை (குளப்பிட்டி), செல்லத்துரை சுப்பிரமணியம் (கொடிகாமம்), சதாசிவம் பாலசுப்பிரமணியம் (கொடிகாமம்), அருணாசலம் பெண்ணம்மா (பண்டத்தரிப்பு), ஆறுமுகம் தர்மராசா (நுணாவில்), விஸ்வலிங்கம் செல்லத்துரை (வரணி), கோபாலபிள்ளை (பூநகரி), செல்லத்துரை பரமேஸ்வரி (கொக்குவில்), பாபு கோபால் (ஜெயபுரம்), மகேஸ்வரி திலகேஸ்வரம் (கொக்குவில்). (சு)

யாழ். வைத்தியசாலையில் மாற்றப்பட்ட சடலம்

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா வைத்தியசாலை பிரேத அறையிலிருந்து சடலம் ஒன்று உறவினர்களிடம் மாறிக்கொடுத்த சம்பவம் நேற்று முன்தினமிரவு நடைபெற்றுள்ளது

காவல்துறையினரால் கண்டெடுக்கப்பட்ட அச்சுவேலிப்பகுதியைச் சேர்ந்தவரின் சடலத்தையே அயலவர்கள் எடுத்துச் சென்றனர். இச்சடலத்தினை நேற்றுப்பகல் வேளையில் சமகாலியைகள் முடிவுற்று தகனம் செய்யப்பட்டது.

இது இவ்வாறிருக்க, அச்சுவேலிப் பகுதியில் உள்ள சடலத்தைப் பொறுப்பேற்றவந்த உறவினர்கள் வந்து பிரேத அறையில் பார்த்தபோது, அச்சடலம் அங்கு இருக்கவில்லை எனத் தெரியவந்ததும் பின்னர் சடலம் மாறிக்கொடுக்கப்பட்டதும் தெரியவந்தது. (56)

கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

கிராமசேவையாளர் ஸ்ரீ கான கலந்துரையாடல் நாளை 6-ம் திகதி புதன்கிழமை கீழே குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் நடைபெறவுள்ளது எனவே இதில் அவ்வப் பகுதி நிர்வாகபிரிவுளுக்குட்பட்ட சகல கிராம சேவையாளர்களையும் கலந்து கொள்ளுமாறு தமிழீழ விடுதலைப் புலிகள் யாழ். மாவட்ட அரசியல் துறைச் செயலகம் கேட்டுக் கொள்கிறது.

இலங்கை

போதனு வைத்தியசாலையில் இணுமதிக்கப்பட்டுள்ளார்.

ஏழாலை மேற்கு பெரிய தம்பிரான் கோயிலடியைச் சேர்ந்த பி. ஈஸ்வரன் (20 வயது) எனபவரே காயப் பட்டவராவர். படையினர் தொடர்ச்சியாக மேற் கொண்ட துப்பாக்கிப் பிர

பல்கலைக்கழக

விரிவுரைகள் வழமைபோல

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் நேற்றைய தினம் விரிவுரைகள் வாவும் வழமை போல் நடைபெற்றன. பல்கலைக்கழக விரிவுரையாளர் களின் சம்பள உயர்வு கோரி மேற்கொள்ளவிருக்கும் பகிஷ் கரிப்பு எப்போது என்பது பற்றி இன்னமும் முடிவு செய்யப்படவில்லை.

நேற்று நண்பகல் விரிவுரை யாளர்களிடையே கலந்து ரையாடல் ஒன்று நடை பெறவிருந்தது. எனினும் இக்கலந்துரையாடல் பின்னர் இடம்பெறவில்லை. (159)

மரண அறிவித்தல்

மாணிக்கம் பொன்னையா

(சாமியார்)

(இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தர் P. W. D.)

யாழ்ப்பாணம் நீராவியடியைச் சேர்ந்த மாணிக் கம் பொன்னையர் சிவபதம் அடைந்துவிட்டார். அன் னார் மாணிக்கம், மதயக்நாயகியின் அன்பு மகனும், காலஞ்சென்ற வாலாம்பிகையின் அன்புக் கணவரும், பொ. பரம்சோதி, பொ. மோகனதாஸ், பொ. மனோகரன், பொ. வசந்தி ஆகியோரின் அன்புத் தந்தை யும், ஜே. பிறேம்குமார், மே. சுகந்தி, அ. கருணாகரன், வ. இரத்தினராஜா, க. மகேந்திரதாசன், க. நிர்மலாதேவி, க. சுகிலாதேவி, க. இரவீந்திர தாசன், க. ஜெயேந்திரன், சு. அஞ்சனாதேவி, சு. ரதி தேவி, சு. இரமீலாதேவி ஆகியோரின் அன்பு மாம னாரும், சதீஸ்வரன், சுனந்தா ஆகியோரின் அன்புப் பேரனும், க. சந்தசாமி, க. சுப்பிரமணியம் ஆகி யோரின் மைத்துனரும், இராஜலட்சுமி, சிவக் கொழுந்து ஆகியோரின் சகோதரருமாவர் அன்ன ரின் ஈமக் கிரிகைகள் 5-1-1993 (இன்று) செவ்வாய்க் கிழமை காலை 10-00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரிகைக்காக பூதவுடல் கோம் பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தல் உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற் றுக்கொள்ளவும்.

தகவல்:

பொ. மோகனதாஸ் (மகன்)

44/2, ஆலோலி வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம். (சி 7118)

இப்பதிதிரிகை "சுழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தா ரால், யாழ்ப்பாணம் கிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக் கத்திலுள்ள அவரிகளது அச்சகத்தில், 1993-ம் ஆண்டு ஜனவரி மாதம் 05-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, Sri Lanka under Licence Nnmber B/10336/B

கவலைக்கிடமான நிலையில் காயமடைந்தவர்கள்

(யாழ்ப்பாணம்)

இளாலி கடலில் கடற் படையினர் கடந்த சனிக் கிழமை நடத்திய தாக்கு தலில் காயமடைந்தவர்களில் பலரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக தெரிவிக்கப்படு

படையினர்கள் தரப்பில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முன்று பிரிகேடியர்களைக் கொண்ட விசாரணைக்குழு ஒன்று இயங்கி வருகிறது.

இத்தக்குழு படையினரின் ஒழுங்கீனம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு முதல்கட்ட அறிக்கையை அண்மையில் சமர்ப்பித்துள் ளது.

இந்த அறிக்கையின் பிர காரம் முப்பதிற்கு மேற் பட்ட படையினர் மீது கடுமையான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிறது:

காயமடைந்தவர்கள் கிளி நொச்சி ஆஸ்பத்திரியில் அனு மதிக்கப்பட்டிருந்த போதி லும் அங்கு போதிய மருத்துவ வசதிகள் இல்லாமையினால் இவர்களுக்கு சிகிச்சையளிக்க முடியாதிருப்பதாகத் தெரிவிக் கப்படுகிறது.

இதனையே கிளிநொச்சி கடற்கரையில் கரையொதுங் கிய 15 சடலங்களும் காவல் துறையினரால் மீட்கப்பட்டு கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது.

இறந்தவர்களின் உறவினர் கள் இந்தச் சடலங்களை கிளி நொச்சி வைத்தியசாலையில் வைத்து அடையாளம் காண் பதற்குரிய ஏற்பாடு செய்யப் பட்டுவிது. (வி)

யாழ்நகரில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்படி போராட்டம் சம் பந்தமான ஆலோசனைக்கூட்ட மொன்று இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ். இந்துக்கல் லூரி குமாரசாமி மண்டபத் தில் நடைபெறவுள்ளது.

இந்த ஆலோசனைக் கூட்டத் தில் சகல அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் கலந்து கொள்ளுமாறு தமிழீழ வெகு ஜன அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் திரு.சூ சிறில் வேண்டு கோள் விடுத்துள்ளார். (வி)

போராட்ட வாழ்வை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் படத்தில் பாத்திரப் பங்கேற்ற சகலரும் மிகவும் தத்ரூபமாக, சிறப்பாக நடித்துள்ளனர். முல்லை மண் ணின் இயற்கை அழகும், வள மும், வாழ்நிலையும் இக்கலைப் படைப்பிற்கு மேலும் மெரு கூட்டுகிறது. எமது விடுதலைப் போராட்டத்தின் உன்னதத் தையும், மக்களின் உறுதி தள ராத பங்களிப்பையும் வெளிக் கொண்டு வந்ததில் தமிழோசை வெற்றி கண் டுள்ளது." என்று தலைவர் தொடர்ந்து கூறினார்.

வெறும் வர்த்தக நோக்கு டன், எதார்த்த வாழ்விற்குப் புறம்பாக, மக்கள் மனதில் விரசமான கருத்துக்களை விதைத்து வரும் தென்னிந் திய சினிமாவின் தாக்கங்களி லிருந்து விடுபட்டு, புதுமை யான பரிசோதனையாக, சமூ கப் பொறுப்புணர்வுடன் சினிமா என்ற ஊடகம் இனி முன்னெடுக்கப்படவேண்டும் எனவும் தலைவர் எடுத்துரைத் தார். முல்லை மாவட்டம் கலைப் பணியில் முன் நின்று, எமது பண்பாட்டு வாழ்வு இதைவருது பாதுகாத்து வரு வதையிட்டும் தலைவர் பாராட் டுதி தெரிவித்தார். (ரி)

கிவலிங்கம் அன்னபூரணம் (கோட்டைக்காடு ஏழாலை), இராசலிங்கம் செல்லத்துரை (புத்தூர் மேற்கு நவக்கிரி) சின்னையா கனகசபை (பரீ), சின்னையா கனகராசா (பரீ), நளினி திலகேயம்பல நாதன், பகோதா செல் லத்துரை (குளப்பிட்டி)

விஸ்வலிங்கம் செல் லத்துரை (வரணி) கோபாலபிள்ளை (பூநகரி), செல்லத்துரை பரமேஸ்வரி (கொக்குவில்), பாபு சேசபால் (ஜெயபுரம்), மகேஸ்வரி திலகேயம்பலம் (கொக்குவில்) (சு)

யாழ். வைத்தியசாலையில் மாற்றப்பட்ட சடலம்

(யாழ்ம்பாணம்)

யாழ் போதனு வைத்திய சாலை பிரேத அறையிலிருந்து சடலம் ஒன்று உறவினர்களி டம் மாறிக்கொடுத்த சம்ப வம் நேற்று முன்தினமிரவு நடைபெற்றுள்ளது

காவல் துறை யினரால் கண்டெடுக்கப்பட்ட அச்சு வேலிப்பகுதியைச் சேர்ந்த வரின் சடலத்தையே அரிய லைப் பகுதியில் உள்ளவர்கள் எடுத்துச் சென்றனர். இச் சடலத்தினை நேற்றுப்பகல் வேளையில் சமகிரியைகள் முடிவுற்று தகனம் செய்யப் பட்டது.

இது இவ்வாறிருக்க, அச்சு வேலிப் பகுதியில் உள்ள சட லத்தைப் பொறுப்பேற்றவந்த உறவினர்கள் வந்து பிரேத அறையில் பார்த்தபோது, அச்சடலம் அங்கு இருக்க வில்லை எனத் தெரியவந்ததும் பின்னர் சடலம் மாறிக் கொடுக்கப்பட்டதும் தெரிய வந்தது. (56)

கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

கிராமசேவையாளர் மட்ட மான கலந்துரையாடல் நாளை 6-ம் திகதி புதன் கிழமை காலை குறிப்பிடப் பட்டுள்ள இடங்களில் நடை பெறவுள்ளது.

இதில் அவ்வப் பகுதி நிர்வாகபிரிவுகளுக்குட்பட்ட சகல கிராம சேவையாளர் களையும் கலந்து கொள்ளு மாறு தமிழீழ விடுதலைப் புலி கள் யாழ். மாவட்ட அரசியல் துறைச் செயலகம் கேட்டுக் கொள்கிறது.

மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவுக்கு அதே அலு வலகத்தில் மு. ப. 10-00 மணி. தீவகம் (வேலணை, ஊர்காவற்றுறை உ. அ அதி பர்கள் பிரிவு) முழுவதும் யாழ். செயலக ஒன்றுகூடல் மண்டபத்தில் நண்பகல் 12-00 மணி.

க. பொ. த. பரீட்சை

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

தர வகுப்புகள் உள்ள பாட சாலை மாணவர்கள் உயர்கல் வியை தேர்ந்தெடுத்து தொடர அனுமதி அளிக்கப் பட்டுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது. (157)

அனுரா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இரு தரப்பினருமே ஆக் ரோஷமாக சத்தமிட்டவாறு தாக்க முயற்சித்தனராம். இத னால் உறுப்பினர்கள் மத்தியில் பெரும் அமளிதுமளி ஏற்பட் டது.

இச்சமயத்தில் அனுராவும் சந்திரிகாவும் ஒருவரை ஒருவர் காறியுமிழ முயற்சித்ததாக வும் ஒருவரை ஒருவர் தாக்க முற்பட்டதாகவும் இருவருமே பரஸ்பரம் குற்றஞ்சாட்டியுள் ளனர்.

ஹொரகொல்லையில் அண் மையில் நடைபெற்ற கட்சிக் கூட்டத்திலேயே மேற்படி சம் பவங்கள் இடம்பெற்றுள்ளதா கக் கூறப்படுகிறது. (ச)

இலங்கை சனத் தொகை

(தொழும்பு)

இலங்கையின் சனத்தொகை 1 கோடி 76 லட்சமாக அதி கரித்துள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

இலங்கையின் சனத்தொகை 50 வருடங்களில் மேலும் இரண்டு மடங்காக அதிகரிக்கு மென்று சனத்தொகை தக வல் பிரிவு பணிப்பாளர் கலா நிதி ஏ. ஜே. பி. அபயசேகர தெரிவித்துள்ளார். (சு)

மீளாய்வு செய்யப்பட்ட

வீட்டைகள் விநியோகம்

(மானிப்பாய்)

வேலணை பிரதேச செயலர் அலுவலகத்தில் மீளாய்வு செய்யப்பட்ட உலர் உணவு அட்டைகள் நேற்று 4ந் திகதி முதல் அவ்வலுவலகத்தில் வைத்து விநியோகிக்கப்படு கின்றன.

இவற்றைப் பெறுவதற்கு வேலணை ப. நோ. கூ. சங்க எல்லைக்குட்பட்டவர்கள் தமது குடும்ப பதிவுகார்ட்டையுடனும் தேசிய அடையாள அட்டையு டனும் நேரில் வந்து பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட் டுள்ளனர். (71)